09.11.2016

தினமலர்

## ரூ.169



ஆட்டுக்கறி விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த தீபாவளிக்கு வெள்ளாட்டுக்கறி கிலோ 650 ரூபாய், செம்மறி ஆட்டுக்கறி கிலோ 550 ரூபாயை எட்டியது. கறி விலை பண்டிகை காலங்களில் ஏறு முகத்துடன் நிலை பெற்றுவிடுகிறது. விலை குறைய வாய்ப்பே இல்லை. மாமிச பிரியர்கள் அதிகரித்து வருவதால், ஆட்டுக்கறிக்கு மவுசு குறையாது.'கொட்டில் வளர்ப்பு' முறையில் ஆடு வளர்ப்பு நிலைத்த வருவாயை ஈட்டித் தருகிறது. மதுரை மாவட்டம் தும்மைப்பட்டி அருகே பரமநாதபுரம் கிராமம் ஆடு வளர்ப்புக்கு பெயர் பெற்று வருகிறது. விவசாயி பாண்டிசெல்வம் 'எஸ்.கே.இ.' என்ற பெயரில் ஆட்டுப்பண்ணை நடத்தி வருகிறார். கொட்டில் முறையில் வெள்ளாடு, செம்மறி ஆடுகளை வளர்க்கிறார். இரவில் மட்டும் ஆடுகள் கொட்டிலில் அடைக்கப்படுகின்றன. பகலில் மேய்ச்சலுக்கு அனுப்புகிறார். கொட்டில் முறையில் தீவனம் ஒரே மாதிரியாக இருக்கும். ஆடுகளை மேய்ச்சலுக்கு விடுவதால் அனைத்து வகையான சத்துக்களும் ஆடுகளுக்கு இயற்கை உணவாக கிடைக்கிறது.

கிலோ ரூ.169: இப்பண்ணையில் வெள்ளாடு கிலோ 200 ரூபாய். செம்மறி ஆடு 169 ரூபாய். 6 முதல் 7 கிலோ எடையுள்ள குட்டி முதல் 50 கிலோ எடையுள்ள பெரிய ஆடு வரை எடை போட்டு கொள்முதல் செய்யலாம். விலையில் பேரம்

பேசவும், புரோக்கர்களுக்கும் இடமில்லை. நேரடியாக பண்ணைக்கு வந்து ஆடுகளை தேர்வு செய்து உடனுக்குடன் வாங்கி செல்லலாம். வியாபாரிகள், ஆட்டுப்பண்ணை நடத்துவோர், சொந்த தேவைக்கு என வாங்கி செல்கின்றனர். வெளிமாநிலம், வெளிநாடுகளுக்கும் ஆடுகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சென்னைக்கு மட்டும் உரிக்க முழு ஆடுகள் 400 எண்ணிக்கையில் ஏஜன்ட்கள் மூலம் தினமும் ரயிலில் அனுப்பப்படுகிறது.

மாலத்தீவு 'மச்சான்': பண்ணை உரிமையாளர் பாண்டிசெல்வம் கூறியதாவது: தினமும் காலை, மாலை இரு வேளை மேய்ச்சலுக்கு அனுப்புகிறோம். ஆடுகளுக்காக பண்ணை வளாகத்தில் ஊட்டச்சத்து மிகுந்த 'கோ 4' ரக புல் வளர்க்கப்படுகிறது. 1,500 ஆடுகளை கொட்டிலில் அடைக்க மெகா ெஷட் அமைக்கப்பட்டுள்ளது. கழிச்சல், காய்ச்சலுக்கு கால்நடை மருத்துவர் சிகிச்சை அளிக்கிறார். மாலத்தீவு, சிங்கப்பூர், மலேஷியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து நேரடியாக பண்ணைக்கு வந்து ஆடுகளை கொள்முதல் செய்கின்றனர். மாலத்தீவுக்காரர்களை 'மாலத்தீவு மச்சான்' என வியாபாரிகள் அழைக்கின்றனர். சராசரி வருமானம் மாதம் 50 ஆயிரம் ரூபாய் என்றார். ஆடு தேவைக்கு 99527 80260ல் ஹலோ சொல்லலாம். **- கா.சுப்பிரமணியன், மதுரை**

## அவரை கள் பலவிதம்: ஒவ்வொன்றும் ஒரு விதம்

**"பறவைகள் பல விதம்...**

ஒவ்வொன்றும் ஒருவிதம்..." என்ற பாடல் வரிகள் போல் அவரையிலும் பல ரகங்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனிச்சுவை உண்டு. அதிலும் திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை அவரையின் ருசி அலாதியானது. காபி செடிகளில் ஊடுபயிராக அவரை சாகுபடி நடக்கிறது. சிறுமலை பொன்னுருவியை சேர்ந்த மலைவாழ் விவசாயி மஞ்சம்மாள் தனது காபி தோட்டத்தில் அவரையை ஊடுபயிராக சாகுபடி செய்து லாபம் ஈட்டுகிறார். அவர் கூறியதாவது: சிறுமலையில் விளைவிக்கப்படும் அவரை ரகங்கள் ஜமுனாபாரி ஆடுகளின் காதுகள் போல் நீளமாகவும், சதைப்பிடிப்பு அதிகமாகவும் இருக்கும். பொறியல், அவியல், சாம்பாரில் கலந்து சமைத்தால் சுவை நன்றாக இருக்கும். கோமி, பெல்ட், நைஸ் பெல்ட் என மூன்று வித அவரைகள் சிறுமலையில் விளைகிறது. காபி செடிகளின் நடுவே பத்து அடிக்கு ஒரு குழி வீதம்

300 குழிகளில் அவரை சாகுபடி செய்கிறேன். கார்த்திகையில் நடவு செய்து பங்குனியில் காய்கள் எடுக்கலாம். தொடர்ந்து ஆறு மாதம் காய்ப்பு இருக்கும். சீசன் நேரங்களில் கிலோ 50 ரூபாய் வரை விலை போகும். திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டிற்கு அனுப்புகிறோம். அங்கிருந்து வியாபாரிகள் அனுப்புகின்றனர் என்றார்.

## விதை கிலோ ரூ.500



திண்டுக்கல் மாவட்டம் மைக்கேல்பாளையத்தை சேர்ந்த அவரை விதை வியாபாரி செல்வராஜ் கூறியதாவது: அவரை சீசன் துவங்கும்போது சிறுமலைக்கு கோழி, பெல்ட், நைஸ் பெல்ட் ரக அவரை விதைகளை விற்கிறேன். விவசாயிகள் ஆர்வமாக வாங்கி செல்கின்றனர். விதை கிலோ 500 ரூபாய். நாட்டு அவரை ரகங்கள் சிறுமலை மண்ணில் அருமையாக வளர்கின்றன. குறைந்த நீர் போதும். பனிப்பொழிவிலும் நன்றாக வளரும் என்றார்.

## 'பிரதமர் பயிர் காப்பீடு திட்டம்'

(பி.எம்.எப்.பி.ஒய்.) என்பது இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளின் போது விவசாயிகளுக்கு தக்க நேரத்தில் நிதி வழங்கி உதவுவது. தவிர விவசாயத்தில் நிலை பெற செய்தல். நவீன வேளாண் தொழில் நுட்பங்களை கடைபிடிக்க விவசாயிகளை ஊக்குவித்தல். கடன் உதவி தொடர்ந்து கிடைப்பதை உறுதிபடுத்துதல். வேளாண் வளர்ச்சியை மேம்படுத்துதல் போன்றவையாகும். பயிர் கடன் பெறும் விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். பயிர் கடன் பெறாத விவசாயிகள் விருப்பத்தின் பேரில் சேர்த்து கொள்ளப்படுவர். இதற்காக மத்திய அரசு 600 கோடி ரூபாய், மாநில அரசு 160 கோடி ரூபாய் என மொத்தம் 760 ரூபாய் ஒதுக்கி உள்ளது. இத்திட்டத்தில் விவசாயிகளை இணைக்க மாவட்டம் தோறும் வட்டார அளவில் 'அக்ரி

இன்சூரன்ஸ் கம்பெனி' தொடர்பு அலுவலர்களை நியமித்துள்ளது.விபரங்களுக்கு வட்டார வேளாண் அலுவலர்களை அணுகலாம்.

## நிலக்கோட்டை பூ சந்தையில் கனகாம்பரம் கிலோ ரூ. 1000

நிலக்கோட்டை: நிலக்கோட்டை பூ சந்தையில் கடந்த ஆண்டை விட பூ வரத்து குறைவால் கனகாம்பரம், பிச்சி விலை இருமடங்கு விலைக்கு விற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

நிலக்கோட்டை பூ மார்க்கெட்டிற்கு நாளுக்கு நாள் பூக்கள் வரத்து குறைந்து வருகிறது. மல்லிகை வரத்து குறைந்தாலும் வியாபாரிகள் அதிகம் வராததால் கிலோ விலை ரூ. 80க்கு குறைந்தது.

2 நாட்களுக்கு முன் திருமண முகூர்த்தங்களால் ரூ. 800க்கு விற்றது. பிச்சிப் பூ கிலோ ரூ. 180க்கு விற்றது. இது கடந்த ஆண்டை விட இருமடங்கு அதிகம். சென்ட் தொழிற்சாலைகளுக்கு அதிகமாக வாங்கப்படுவதால் பிச்சிப் பூவிற்கு நல்ல விலை கிடைத்து வருகிறது.

கனகாம்பரம் ரூ.1000:

முகூர்த்தத்திற்கு முதல் நாள் பூக்கள் விலை உயர்வது வழக்கமாகும். கனகாம்பரம் செடியில் 3 நாட்கள் பறிக்காமல் வைத்துக் கொள்ளலாம் என்பதால் வரும் வியாழக்கிழமை (வெள்ளிக்கிழமை முகூர்த்தம்) சந்தைக்கு கொண்டு சென்றால் நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் பறிக்காமல் உள்ளனர். நேற்று வரத்து குறைவால் கிலோ ரூ. 1000க்கு விற்பனையானது. சம்பங்கி கிலோ ரூ. 80, ஒட்டு சம்பங்கி 40, செவ்வந்தி 50, அரளி, 20, மருகு, 10, மரிக்கொழுந்து 20, வாடாமல்லி 20க்கு விற்பனையானது.

## 'திண்டி மா வனம்' பசுமை பாய்ச்சல் இன்று 2 இடங்களில் மரக்கன்று நடவு

திண்டுக்கல்: திண்டுக்கல்லை பசுமையாக்கும் நோக்கில், 'திண்டி மா வனம்' இயக்கம் சார்பில் மரக்கன்றுகள் நடும் பணி மீண்டும் பசுமை பாய்ச்சலாக துவங்கியுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 'வனத்துக்குள் திருப்பூர்' எனும் இயக்கத்தை துவங்கிய வெற்றி அமைப்பு அம்மாவட்டத்தில் 2 லட்சம் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்கின்றனர்.

இதனால் திருப்பூர் வனச்சோலையாக மாறிவருகிறது.

அதேபோல் திண்டுக்கல்லில் திண்டி மா வனம் அமைப்பின் மூலம் வரும் 2017 செப்டம்பருக்குள் 2 லட்சம் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க உறுதி எடுத்துள்ளனர். தினமும் மரக்கன்றுகள் நடவு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 7 ஆயிரத்து 921 மரக்கன்றுகள் நட்டும், 3 ஆயிரம் பனை விதைகள் விதைத்தும் பராமரிக்கப்படுகிறது. இந்த தன்னிகரில்லா பசுமைப்பணியில் தினமலர் நாளிதழும் திண்டி மா வனம் அமைப்போடு கைகோர்த்து களமிறங்கியுள்ளது.

இன்று நடவுப்பணி: திண்டுக்கல் ஏ.வெள்ளோடு அருகே உள்ள நரசிங்கபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் இன்று காலை 9:00 மணிக்கு முதன்மை கல்வி அலுவலர் சுபாஷினி தலைமையில் 250 மரக்கன்றுகள் நடப்படுகிறது.

பழநி: பழநி தண்டாயுதபாணி அன்னதானகுழு - இந்து சமய அறநிலையத்துறை திண்டி மா வனம் அமைப்புடன் இணைந்து, காலை 9:00 மணிக்கு மலைப்பகுதியில் அரிய வகை தல விருட்சம் மற்றும் மூலிகை மரங்களை நடப்பட உள்ளது.

## ரூ.1.40 கோடியில் இலவச பசுமாடுகள் - கலெக்டர் தகவல்

திண்டுக்கல்: 'மாவட்டத்தில் ரூ.1.40 கோடியில் இலவச பசுமாடுகள் வழங்கப்பட்டுள்ளன' என, கலெக்டர் வினய் தெரிவித்தார்.

ஆத்துார் தாலுகா வக்கம்பட்டியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் காணை நோய் தடுப்பூசி முகாமை கலெக்டர் வினய் துவக்கி வைத்தார்.

அவர் பேசியதாவது: மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் ரூ.32.91 கோடியில் 247 கிராமங்களில் வசிக்கும் நிலமற்ற ஏழைகளுக்கு ஒரு லட்சத்து ஆயிரத்து 948 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பசுமாடுகள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் 250 ஏழைகளுக்கு பிற மாநிலங்களிலிருந்து இருந்து வாங்கி 400 கலப்பின பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது, என்றார்.

முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சாமுவேல் ஜெபராஜ் வேதமுத்து, உதவி இயக்குனர்கள் அப்துல்காதர், ஆத்துார் தாசில்தார் சிவசங்கரன், கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

## இயற்கை வளம் குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி

கிருஷ்ணராயபுரம்: மகாதானபுரத்தில், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு, உள்ளூர் சுற்றுச்சூழல் வளங்களை பயன்படுத்தி அறிவியலை கற்பித்தல் பயிற்சி வழங்கப்பட்டது. கரூர் மாவட்டம் அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் சார்பில், உள்ளூர் சுற்றுச்சூழல் வளங்களை பயன்படுத்தி அறிவியல் கற்பித்தில் தொடர்பாக, கிருஷ்ணராயபுரம் வட்டார தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு, மகாதானபுரத்தில் பயிற்சி வழங்கப்பட்டது. இதில், உதவி தொடக்க கல்வி அலுவலர் அருணாதேவி, லாலாப்பேட்டை வட்டார வளமைய மேற்பார்வையாளர் கவிதா, ஒருங்கிணைப்பாளர் ரவிக்குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## வேளாண் கல்லூரி மாணவியர் மா மகசூல் குறித்து பயிற்சி

கிருஷ்ணராயபுரம்: மகாதானபுரத்தில், திருச்சி வேளாண் கல்லூரி மாணவியர், மா மகசூல் குறித்த பயிற்சியில் பங்கேற்றனர். திருச்சி மாவட்டம். அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவியர், மகாதானபுரம் காவிரி டெல்டா பாசன சங்கத்தலைவர் ராஜாராம் தோட்டத்தில், மாந்தோப்பு பண்ணைகளில் கள ஆய்வு மேற்கொண்டனர். ஒவ்வொரு ஆண்டும், டிசம்பர் இறுதியில், குளிர் அதிகரிக்கும் போது மாமரங்களில், பூ பூக்க ஆரம்பிக்கும்; பருவகால மாற்றங்களில் இந்தாண்டு ஒருசில ரக மாமரத்தில் மட்டும் பூ பூத்துள்ளது. இதில், மா பூக்கள் உதிர்வது, நோய் பாதிப்பு, தடுப்பு முறைகள், சாகுபடி, அறுவடை உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்து, வேளாண் பேராசிரியர்கள் வழங்கினர்.

## வேளாண் கல்லூரி மாணவியர் மா மகசூல் குறித்து பயிற்சி

கிருஷ்ணராயபுரம்: மகாதானபுரத்தில், திருச்சி வேளாண் கல்லூரி மாணவியர், மா மகசூல் குறித்த பயிற்சியில் பங்கேற்றனர். திருச்சி மாவட்டம். அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவியர், மகாதானபுரம் காவிரி டெல்டா பாசன சங்கத்தலைவர் ராஜாராம் தோட்டத்தில், மாந்தோப்பு பண்ணைகளில் கள ஆய்வு மேற்கொண்டனர். ஒவ்வொரு ஆண்டும், டிசம்பர் இறுதியில், குளிர் அதிகரிக்கும் போது மாமரங்களில், பூ பூக்க ஆரம்பிக்கும்; பருவகால மாற்றங்களில் இந்தாண்டு ஒருசில ரக மாமரத்தில் மட்டும் பூ பூத்துள்ளது. இதில், மா பூக்கள் உதிர்வது, நோய்

பாதிப்பு, தடுப்பு முறைகள், சாகுபடி, அறுவடை உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்து, வேளாண் பேராசிரியர்கள் வழங்கினர்.

## தேனீ வளர்ப்பு பயிற்சி

மதுரை : மதுரை வேளாண் கல்லூரி பூச்சியியல் துறையில் தேனீ வளர்ப்பு குறித்த இரண்டு நாள் பயிற்சி நடக்கிறது.

நவ., உ0கசூ முதல் மார்ச் உ0கஎ வரை பல்வேறு கட்டங்களாக நடக்கும் இப்பயிற்சிக்கு, இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் நிதி உதவி அளிக்கிறது. இதில், மதுரை, தேனி, கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகள் பங்கேற்கலாம். ஒரு வட்டாரத்திற்கு உரு விவசாயிகள் வீதம் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்படும்.

பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் குடும்ப அட்டை, 'ஆதார்' அட்டையுடன் நேரடியாக அல்லது கூகூசூடுஉ அஅஎசூ0 என்ற எண்ணிற்கு குறுந்தகவல், 'வாட்ஸ் ஆப்' தகவல் அனுப்பி முன்பதிவு செய்யலாம்.

## விதைப்பண்ணை அமைக்க பயிற்சி

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், விரிவாக்க சீரமைப்புத் கிட்டக்கில் பெரியகோம்பை கிராமக்கில் விகைப்பண்ணை அமைக்கல் மற்றும் விதைப்பண்ணை அமைக்க பயிற்சி வழங்கப்பட்டது. நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி இயக்குநர் அசோகன், விதைப்பண்ணை அமைப்பதின் அவசியம், விதை சான்று நடைமுறைகளை விளக்கினார். லத்துவாடி, வேளாண் அறிவியல் நிலைய உழவியல் துறை விஞ்ஞானி அழகுதுரை, நாற்றங்கால் தயாரிப்பு, நேரடி விதைப்பு, விதை நேர்க்கி, பயிர் எண்ணிக்கை பராமரிக்கல், நுண்சக்கு மேலாண்மை, நுண்ணீர் பாசனம் ஆகியவை குறிக்கு கூறினார். வேளாண் குணை இயக்குன லோகநாக பிரகாசம் மானியக் கிட்டங்கள் மற்றும் இயந்திரங்களின் மானிய விவரங்களை எடுத்துரைத்தார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

## ரூ. 15 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையில், 15 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் வர்த்தகம் நடந்தது. நாமகிரிப்பேட்டை, ஆர்.சி.எம்.எஸ்.,ல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில், விரலி ரகம் அதிகபட்சம், 100 கிலோ மூட்டை, 9,539 ரூபாய், குறைந்தபட்சம், 8,025 ரூபாய்க்கும் விலை போனது. உருண்டை ரகம் அதிகபட்சம், 8,112 ரூபாய், குறைந்தபட்சம், 7,142 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி ரகம் அதிகபட்சம், 18 ஆயிரத்து, 689 ரூபாய், குறைந்தபட்சம், 17 ஆயிரத்து, 500 ரூபாய்க்கும் ஏலம் போனது. விரலி, 200, உருண்டை, 53, பனங்காலி, இரண்டு என, 255 மூட்டைகள், 15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

தினகரன்

## 30 மூட்டை நிலக்கடலை □35 ஆயிரத்துக்கு விற்பனை

இடைப்பாடி: சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நிலக்கடலை ஏலம் நடந்தது. கோரணம்பட்டி, பூலாம்பட்டி, எருமைப்பட்டி, கோனசமுத்திரம், சமுத்திரம், தாதாபுரம், வேம்பனேரி, குள்ளம்பட்டி, தேவூர், செட்டிப்பட்டி, பூமணியூர், கோனேரிப்பட்டி, ஆவடத்தூர், ஆடையூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 30 நிலக்கடலை மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்திருந்தனர். 60 கிலோ கொண்ட உலர்ந்த நிலக்கடலை மூட்டை □1,500 முதல் □1,900 வரையும் ஏலம் போனது. இதன்மூலம் மொத்தம் □35 ஆயிரத்துக்கு விற்பனையானது. கடந்த ஏலத்தைவிட, கிலோவுக்கு □4 முதல் □5 வரை குறைவாக ஏலம்போனதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

## உருளைகிழங்கு விலை உயர்கிறது

ஊட்டி, : மேட்டுப்பாளையம் மண்டிகளில் நீலகிரி உருளைகிழங்கிற்கு விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலை காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரும்பாலனோர் மலை காய்கறி விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். அதிலும், உருளைக் கிழங்கு மற்றும் கேரட் விவசாயம் அதிகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நஞ்நாடு, முத்தோரை பாலாடா, இத்தலார், எப்பநாடு, தேனாடுகம்பை, கேத்தி பாலாடா, சோலூர், கொல்லிமலை மற்றும் ஊட்டி புறநகர் பகுதிகளில் அதிகளவு உருளைகிழங்கு மற்றும் கேரட் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மலை காய்கறிகள் அனைத்தும் லாரிகள் மூலம் மேட்டுப்பாளையம் மண்டிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. பெரும்பாலும் அங்குள்ள தனியார் மண்டிகளில் விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த மாதம் வரை உருளைக்கிழங்கிற்கு துண்டு ஒன்று (45 கிலோ மூட்டை) ரூ.600 முதல் ரூ.800 வரை விலை கிடைத்துள்ளது. ஆனால், கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக உருளைக்கிழங்கின் விலை படிப்படியாக உயர்ந்துள்ளது. தற்போது துண்டு ஒன்று ரூ.1000 முதல் ரூ.1500 வரை மேட்டுப்பாளையம் மண்டிகளில் விலை போவதாக கூறப்படுகிறது. இதனால், உருளைக் கிழங்கு விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## அனைத்து பயிர்களுக்கும் ஏற்ற இயற்கை உயிர் உரம் பஞ்சகவ்யம்

பட்டுக்கோட்டை : அனைத்து பயிர்களுக்கும் எற்ற இயற்கை உரமான பஞ்சகவ்யம் உரக்கரைசலை தயாரிப்பது எப்படி என விவசாயிகளுக்கு திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயிகள் பலரும் பஞ்சகவ்யம் என்ற இயற்கை தெளிப்பு உரக்கரைசலை எல்லாவகை பயிர்களுக்கும், பூச்செடிகளுக்கும், பழ மரங்களுக்கும் தெளித்து பயன்பெற்று வருகின்றனர். தயாரிக்கும் முறை. பஞ்சகவ்யம் தயாரிப்பதற்கு பசுமாட்டு சாணம் 5 கிலோ, பசுமாட்டு சிறுநீர் 3 லிட்டர், தண்ணீர் 5 லிட்டர், வெல்லம் அரை கிலோ. இவற்றை சிமெண்ட் தொட்டி, பானை, பிளாஸ்டிக் கேன்,

தாழி ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் இட்டு நன்கு கலந்து 14 நாட்கள் ஊற வைக்க வேண்டும்.

(இரும்பு மற்றும் அலுமினிய கொள்கலன்களை பயன்படுத்தக்கூடாது) தினசரி 2 முதல் 4 முறை நன்கு கலக்க வேண்டும். இதனால் நொதித்தலினால் உருவாகும் வாயு வெளியேற இது உதவும். 14 நாள் கழித்து 15ம் நாள் இத்துடன் பசுமாட்டுப்பால் 2 லிட்டர், நன்கு புளித்த பசுமாட்டு தயிர் 2 லிட்டர், பசுமாட்டு நெய் 1 லிட்டர், கருப்பட்டி (பனைவெல்லம்) அரை கிலோ (அல்லது) கரும்புச்சாறு 2 லிட்டர், இளநீர் 3 லிட்டர், நன்கு கனிந்த வாழை பழங்கள் 12 எண்ணிக்கை, கள் 2 லிட்டர் ஆகியவற்றை சேர்த்து நன்கு கலக்க வேண்டும். கரும்பு சாறு கிடைக்காதபோது 3 லிட்டர் நீரில் (அரை) ைஅர கிலோ நாட்டுச் சர்க்கரையை கரைத்து பயன்படுத்த வேண்டும்.

அனைத்தையும் சேர்த்து மேலும் 7 நாட்கள் முன்பு போலவே தினமும் 2 முதல் 4 முறை கலக்க வேண்டும். 22வது நாளில் பேரூட்ட சத்துக்கள், நுண்ணூட்ட சத்துகள், நுண்ணுயிர்கள், பயிர் வளர்ச்சி ஊக்கிகள் பெருகி சத்து மிகுந்த இயற்கை உயிர் உரமான "பஞ்சகவ்யம்" கரைசல் தயாராகி விடும். முறையாக தயாரிக்கப்பட்ட பஞ்சகவ்யம் 1 லிட்டர் கரைசலுக்கு 10 லிட்டர் தண்ணீர் என்றளவில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு மாலை வேலையில் எல்லா பயிர்களுக்கும் தெளிக்கலாம்.

பஞ்சகவ்யத்தில் தழை, மணி, சாம்பல் சத்துக்களும், நுண்ணூட்ட சத்துகளும், நுண்ணுயிர் சத்துகளும், பயிர் வளர்ச்சி ஊக்கிகளும் மிகுந்த அளவில் உள்ளன. எனவே முளைப்புத் திறன் கூடுகிறது. வேர் வளர்ச்சி அதிகரிக்கிறது. பயிர்கள் செழிப்பாக வளரும், மகசூல் அதிகமாக கிடைக்கும். நெய்பயிருக்கு ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டும். திருவிடைமருதூர், : கும்பகோணத்தில் அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளின் தொடக்கநிலை ஆசிரியர்களுக்கு அனைவக்கும் கல்வி இயக்க பயிற்சி நடைபெற்றது.

கும்பகோணம் அனைவருக்கும் கல்வி இயக்கம் வட்டார வளமையம் சார்பில் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தொடக்க நிலை ஆசிரியர்களுக்கு கதை மற்றும்

பொம்மலாட்டம் வாயிலாக மதிப்பு, அமைதிக் கல்வியை வளர்த்தல் சம்மந்தமான பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை கும்பகோணம் உதவி கூடுதல் உதவி தொடக்க கல்வி அலுவலர்கள் பரமசிவம் மற்றும் நடராஜன் ஆகியோர் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினர். கும்பகோணம் வட்டார வளமைய மேற்பார்வையாளர் வெங்கடராஜீலு முன்னிலை வகித்தார்.

பயிற்சியில் கதை கூறும் முறைகள் கதையின் பயன்கள், கதைகள் மூலம் நன்னெறி வளர்த்தல் பொம்மலாட்டம் செயல்படுத்தும் முறை மற்றும் அதன் மூலம் மாணவர்களிடம் நன்மதிப்பை வளர்த்தல் குறித்த தகவல்கள் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சி வட்டார வளமையம், சிறிய மலர் மேல்நிலைப்பள்ளி, முத்துபிள்ளை மண்டபம் நடுநிலைப்பள்ளி, குடந்தை நகர மேல்நிலைப் பள்ளி, சரஸ்வதி பாடசாலை, புனித வளனார் பள்ளி உள்ளிட்ட பல்வேறு பள்ளிகளில் நடைபெற்றது. பயிற்சியில் கருத்தாளர்களாக ஆசிரியப் பயிற்றுனர்கள் விஜிதா, சரவணன், சிவகுமார், குமார், சாந்தஷீலா, அழாகனந்தன், பாக்கியராஜ், ஜெயச்சந்திரன், மாணிக்கராஜா மற்றும் ஆசிரியர்கள் செயல்பட்டு பயிற்சி அளித்தனர். ஏற்பாடுகளை செல்வராஜ் செய்திருந்தார்.

## வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பாரம்பரிய நெல் சாகுபடி செயல்விளக்க பயிற்சி முகாம்

திருத்துறைப்பூண்டி : திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு பாரம்பரிய நெல் சாகுபடி மற்றும் செயல்விளக்க பயிற்சி நடந்தது. முன்னோடி விவசாயி ஓவர்குடி பரமசிவம் தலைமை வகித்தார். கிரியேட் ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் வரவேற்றார். திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் ராவே திட்டத்தின்கீழ் தொழில்நுட்ப மேலாளர் வேம்பு ராஜலட்சுமி தலைமையில் 16 மாணவிகளுக்கு பாரம்பரிய நெல் சாகுபடி தொழில்நுட்பம், இயற்கை வேளாண் இடுப்பொருள் தயாரிப்பு, வயல்வெளி பயிற்சி அளித்து கிரியேட் பயிற்சி இயக்குனர் நெல் ஜெயராமன் பேசுகையில், தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகம் இயற்கை வேளாண்மைக்கான இயக்குனரகத்தை ஏற்படுத்தி இந்தியாவுக்கே வழிகாட்டியாக திகழ்கிறது. இந்தியாவில் இயற்கை வேளாண்மைக்கான மாநிலமாக சிக்கிம் செயல்பட்டு வருகிறது.

தமிழகமும் இயற்கை வேளாண் மாநிலமாக மாறுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பருவநிலை மாற்றம் காரணமாக பருவமழை ஒரே பகுதியில் தாறுமாறாக பெய்து வெள்ளத்தை ஏற்படுத்துகிறது. ஒரு பகுதி வறட்சியாகவே இருக்கிறது. இந்த நேரத்தில் இயற்கை வேளாண் மையமும், பாரம்பரிய நெல் சாகுபடி மட்டுமே உழவர்களுக்கு கை கொடுக்கும் என்றார். பயிற்சி உதவியாளர் பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

## விதை கிராம திட்ட பயிற்சி முகாம்

சீர்காழி : சீர்காழி அருகே எடக்குடி வடபாதி கிராமத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டம் - அட்மா திட்டத்தின்கீழ் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது. சீர்காழி வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்தாஸ் தலைமை வகித்தார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் சுதாகர், விதை சான்று அலுவலர் சுகந்தி, உதவி விதை அலுவலர் உமாபசுபதி முன்னிலை வகித்தனர். தொழில்நுட்ப மேலாளர் பார்கவி வரவேற்றார்.

முகாமில் விதை கிராம திட்டத்தின் நோக்கம், பயிர் காப்பீடு திட்டத்தின் முக்கியத்துவம், உழவியல் தொழில்நுட்பம், விதைமாதிரி எடுத்தல், விதைத்தேர்வு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்தனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் செல்வகுமரன் நன்றி கூறினார்.

## சொட்டுநீர் பாசனத்திற்கு நூறு சதவீத மானியம் வேளாண்துறை தகவல்

பழநி, : சொட்டு நீர் பாசனம் அமைக்க நூறு சதவீத மானியம் வழங்கப்படுவதாக பழநி வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.பழநி வட்டாரத்தில் மக்காச்சோளம், கரும்பு, பருத்தி மற்றும் பயிறு வகைகள் பயிர் செய்யப்பட்டு வருகிறது. பாசன நீர் மற்றும் கூலியாட்கள் தட்டுப்பாடு நிலவுகிறது. இப்பிரச்னைகளை சமாளிப்பதற்கு சொட்டு நீர் பாசனம் ஏற்ற வழியாகும். எனவே, விவசாயிகளின் வசதிக்காக வேளாண்மைத்துறை மூலம் தென்னை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.

பழநி, பாப்பம்பட்டி, காவலப்பட்டி, நெய்க்காரப்பட்டி, ஆயக்குடி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் அந்தந்த பகுதிகளில் உள்ள உதவி வேளாண்

அலுவலர்களையோ, வேளாண்துறை அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம். 5 ஏக்கர் வரை உள்ள விவசாயிகளுக்கு 100% மானியமும், அதற்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு 75% மானியமும் வழங்கப்படுகிறது. மேலும் கூடுதல் விபரங்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ, வேளாண்மை அலுவலரையோ அணுகலாமென வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**உச்சிப்புளி பகுதியில் முடங்கியது கிடுகு தொழில்**

ராமநாதபுரம், : கிராம பகுதிகளில் தொழில்கள் நலிவடைந்து வருவதால், கிடுகு முடையும் தொழில் பணி பாதிப்படைந்துள்ளது. மாவட்டத்தில் உச்சிப்புளி, மண்டபம், வேதாளை, குஞ்சார்வலசை, சுந்தரமுடையான், பிரப்பன் வலசை மற்றும் பெருங்குளம் கிராம பகுதிகளில் தென்னை, பனை மரங்கள் அதிகளவில் உள்ளன. தேங்காய் மற்றும் இளநீர் காய்கள், தென்னை, பனை ஓலைகள், நொங்கு, பனங்கிழங்கு ஆகியவற்றிற்காக தென்னை மற்றும் பனைமர தோப்புகள் இப்பகுதியில் அதிகளவில் வளர்க்கப்பட்டு வந்தன.

தற்போது கான்கிரிட் மற்றும் ஆஸ்பெஸ்டா வீடுகள் அதிகளவில் கட்டப்படுவதால் கிராம பகுதிகளில் கூட குடிசை வீடுகளும் குறைந்து வருகிறது. பலரும் சிமென்ட், செங்கல் மூலம் கான்கிரிட் வீடுகள் கட்டுகின்றனர். வசதி குறைந்தவர்கள் ஆஸ்பெஸ்டா வீடுகளை அமைக்கின்றனர். இதனால் தென்னைஓலைகள் மூலம் முடையப்படும் கிடுகுகளின் தேவை குறைந்து வருகிறது. இதனால் இத்தொழிலை செய்து வந்த பல கிராம பெண்கள்பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுகுறித்து செந்தாமரை கூறுகையில், கடந்த 10 வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் அதிகமாக குடிசை வீடுகள் இருந்தன. அது மெல்ல மெல்ல குறைந்து தற்போது கான்கிரிட் வீடுகள் அதிகரித்து வருவதால் கிடுகுகளின் தேவைகள் குறைந்து விட்டது. இப்போது 50 கிடுகுகள் கொண்ட ஒரு கட்டை ரூ.250க்கு விற்பனை செய்கிறோம். வாகன வாடகை, பராமரிப்பு கூலி என செல வுகள் அதிகரித்து வருவதால் இத்தொழில் நலிவடைந்து வருகிறது. இதனால் பலரும் புதிய சூழலுக்கு ஏற்ப வேறு தொழிலுக்கு மாறி வருகின்றனர் என்றார்.

## பயிர்காப்பீடுக்கு சான்றிதழ் வழங்க விஏஓ கிராமங்களுக்கு வரவேண்டும் விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஆர்.எஸ்.மங்கலம், : பயிர்காப்பீடுக்கு சான்றிதழ் வழங்க கிராமங்களுக்கு விஏஓ வரவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ஆர்எஸ்.மங்கலம் பகுதியில் விவசாயிகள் பயிர்காப்பீடு பெற பதிவு நடந்து வருகிறது. இதற்கு ஒவ்வொரு விவசாயும் சொத்தின் மதிப்பு அளவை விஏஓ சான்று மூலம் கூட்டுறவு வங்கியில் காண்பிக்க வேண்டும். இதற்காக விஏஓ.வை தேடி அனைத்து விவசாயிகளும் ஆர்.எஸ்.மங்கலம் செல்கின்றனர். ஆனால்ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் சேத்திடல், வரவணி, புல்லமடை, தும்பபடைக்காகோட்டை, பாரனூர் உள்ளிட்ட விஏஓ யாரும் அவர்கள் பகுதிக்கு செல்வதில்லை. மாறாக ஆர்.எஸ்.மங்கலத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து கொண்டு அனைவரையும் அங்கு வரச் சொல்கின்றனர்.

இதனால் வயதான விவசாயிகள் அலைந்து திரிந்து சான்று வாங்க சிரமப்படுகின்றனர். உயர் அதிகாரிகள் கிராம நிர்வாக அலுவர்களைகிராமங்களுக்கு சென்றுபணியாற்ற நடவடிக்கைஎடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், விவசாய காலத்தில் அதிகமாக வயல்காட்டில் வேலை இருக்கும். பயிர்காப்பீடுபதிவதற்கு விஏஓவை பார்க்க வந்தால், ஒரு நாள் ஆகி விடுகிறது. மேலும் வயதானவர்கள் தேடி பார்ப்பது சிரமமாக உள்ளது. அதனால் அந்தந்த கிராமத்திற்கு விஏஓ வந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்றனர்.

## விவசாயிகள் குறை தீர் கூட்டம்

சிவகங்கை, : சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நவ.18ல் நடக்க உள்ளது. மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நவ.18 காலை 11 மணிக்கு சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது. கலெக்டர் தலைமையில் நடக்கும் இக்கூட்டத்தில் வேளாண், தோட்டக்கலை, மின்வாரியம், குடிநீர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இதில் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்துகொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

## புளியங்குடி மலைப்பகுதியில் மழை : கோட்டமலையாற்றில் தண்ணீர் வரத்து

புளியங்குடி: புளியங்குடி மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் விடிய, விடிய பெய்த மழையால் கோட்டமலையாற்றில் தண்ணீர் வரத்தொடங்கி உள்ளது. நெல்லை மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழையை எதிர்பார்த்து பல இடங்களில் விவசாயிகள் நெல் சாகுபடியை தொடங்கியுள்ளனர். குறிப்பாக புளியங்குடி, சிவகிரி, வாசுதேவநல்லூர் பகுதியில் சுமார் 10ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யும் வகையில், நெல் நாற்றுகள் தயாரிக்கும் பாத்திகள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் பருவ மழை போக்கு காட்டி வருகிறது.

இந்நிலையில் புளியங்குடி, வாசுதேவநல்லூர், சிவகிரி பகுதியில் நேற்று முன் தினம் இரவு சுமார் ஒன்றரை மணி நேரம் கனமழை பெய்தது. இரவு 11 மணி பெய்யத்தொடங்கிய மழை 12.30 மணி வரை இடைவிடாமல் கொட்டி தீர்த்தது. இதேபோல் புளியங்குடி, சிவகிரி மேற்கு தொடர்ச்சிமலை பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு முதல் விடியவிடிய மழை பெய்தது. இதனால் வறண்டு காணப்பட்ட ஆற்றுபடுகைகளில் தண்ணீர்வர தொடங்கியுள்ளது.

குறிப்பாக புளியங்குடி கோட்டமலையாறு, சிவகிரி கோம்பையாறு மற்றும் வாசுதேவநல்லூர் தலையணையில் தண்ணீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதன்மூலம் தலை குளங்களான காடுவெட்டி குளம், பெரியகுளம், ராசிங்கப்பேரி குளம் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட குளங்களுக்கு தண்ணீர் வரத்தொடங்கியுள்ளது.இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் நீண்ட இடைவெளிக்கு பின்னர் தற்போது மழை பெய்துள்ளதால் குடிநீர் தட்டுப்பாட்டால் சிக்கி தவித்த புளியங்குடி, சங்கரன்கோவில் கோட்டமலையாறு குடிநீர் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**கீழப்பாவூர் பகுதியில் அவரையில் நோய் தாக்குதல்**

பாவூர்சத்திரம்: கீழப்பாவூர் ஒன்றிய பகுதிகளான கீழப்பாவூர், பாவூர்சத்திரம், குறும்பலாப்பேரி, குலசேகரப்பட்டி, மேலப்பாவூர், சடையப்புரம், சாலைப்புதூர், ஆவுடையானூர், கல்லூரணி, நாட்டார்பட்டி, அரியப்புரம், நாகல்குளம், அருணாப்பேரி, அடைக்கலப்பட்டணம் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பகுதிகளில் பல ஏக்கரில் விவசாயிகள் அவரை பயிரிட்டுள்ளனர். தற்போது பருவ நிலை மாற்றத்தால் மஞ்சள் நோய் மற்றும் புழு வெட்டு என்ற நோய் தாக்கி அவரைக்காய் போதிய வளர்ச்சி இல்லாமல் காணப்படுகிறது.

இந்த நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் பல மருந்துகள் தெளித்தும் நோய் கட்டுப்படுவதாக தெரியவில்லை. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் செலவுதான் ஏற்படுகிறது. நோய் தாக்கத்தின் எதிரொலியாக பாவூர்சத்திரம் காமராஜர் தினசரி காய்கறி மார்க்கெட்டில் தரமான அவரைக்காய் கிலோ ஒன்றுக்கு ரூ.15க்கு விற்பனையானது. கட்டுபடியாகாத இந்த விலையால் விவசாயிகள் பெருத்த நஷ்டம் அடைந்து வருகின்றனர்.